# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

| Vol : 01 | Issue : 28 | 4 Pages | 29.08.2023 | Tuesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 28 | 4 பக்கங்கள் | 29.08.2023 | செவ்வாய்க்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


# நாடு முழுவதும் விடியல் ஏற்படுத்த நான் தயாராக இருக்கிறேன்: முதல்வர் கடிதம்

சென்னை, ஆக. 29

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கழக உடன் பிறப்புகளுக்கு எழுதிய கடிதத்தில்கூறி இருப்பதாவது: 2021 சட்டமன்றத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலான கொள்கைக் கூட்டணி மகத்தான வெற்றி பெற்றது. அதற்கு உடன்பிறப்புகளாகிய உங்களின் ஓயாத உழைப்பும் ஒற்றுமையான செயல்பாடும் முக்கியமான காரணமாகும். அதன் விளைவாக, தி.மு.க.வுக்குத் தனித்து ஆட்சி அமைக்கும் பெரும்பான்மை பலத்தை தமிழ்நாட்டு மக்கள் வழங்கினார்கள். என்னுடைய வெற்றிச் சான்றிதழை முத்தமிழறிஞர் கலைஞர் ஓய்வுகொள்ளும் இடத்தில் வைத்து, நன்றிக் காணிக்கை செலுத்திவிட்டு, பதவியேற்பு நிகழ்விலும் அவர் பெயரையும் சேர்த்தே உச்சரித்து, இது கலைஞர் அவர்களின் ஆட்சியின் தொடர்ச்சிதான் என்பதை உறுதி செய்தேன். வளர்ச்சிப் படிக்கட்டுகளில் தமிழ்நாடு முன்னேறிக் கொண்டிருப்பதைக் காண்கிறோம். இந்த வளர்ச்சி நீடிக்க வேண்டும் என்றால் தி.மு.கழகம் தொடர்ந்து ஆட்சி செய்கின்ற வாய்ப்பு அமைய வேண்டும். ஒன்றிய பா.ஜ.க. ஆட்சியாளர்கள் தங்களுக்கு எக்காலத்திலும் வெற்றி வாய்ப்பு இல்லாத தமிழ்நாட்டை மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடத்துவதை மக்கள் அறிவார்கள்.



தங்கள் கட்சியின் ஆட்சி நடைபெறும் மாநிலங்களுக்கு ஒதுக்கப்படும் நிதியைவிடப் பெருமளவு குறைவாகவே தமிழ்நாட்டுக்கு நிதி ஒதுக்கீடு செய்கிறார்கள். இத்தகைய நிலையிலும், தமிழ்நாட்டை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்ல அயராமல் உழைக்கிறது திராவிட மாடல் அரசு. விடியல் வெளிச்சத்தை மக்கள் அனுபவிக்கிறார்கள். ஒன்றிய ஆட்சியிலும் மாற்றம் ஏற்பட்டால்தான், நமது மாநிலத்திற்குரிய நிதி ஒதுக்கீடு முறையாகக் கிடைக்கும். முழுமையான வெளிச்சம் பரவும். தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்தியா முழுவதுமே மதவாத இருட்டை விரட்டும் விடியல் தேவைப்படுகின்ற காலம் இது.

அதற்காகத்தான் திராவிட முன்னேற்றக் கழகம் உள்ளிட்ட 26 கட்சிகள் இணைந்த இந்தியா கூட்டணி உருவாக்கப்பட்டுள்ளது. இந்தியா என்ற பெயரைக் கேட்டாலே ஒன்றிய பா.ஜ.க அரசு அலறக்கூடிய நிலை உருவாகியிருக்கிறது. உண்மையான இந்தியா நம் பக்கம்தான் இருக்கிறது. அந்த இந்தியாதான் இந்தியாவுக்கு விடியலைத் தரக்கூடிய வலிமை கொண்டதாக, 2024 பாராளுமன்றத் தேர்தலில் திகழும். இந்தியாவின் வெற்றி முழுமையடைய வேண்டும் என்றால் தமிழ்நாட்டில் நாம் முழுமையான வெற்றியைப் பெற்றாக வேண்டும். கழகத்தின் தலைவர் என்ற பொறுப்பை நான் சுமந்த இந்த ஐந்தாண்டு காலத்தில் கண்ட களங்கள் அனைத்திலும் வெற்றி..வெற்றி..மகத்தானவெற்றி என்ற நிலை ஏற்பட்டதற்குக் காரணம் உடன்பிறப்புகளாகிய உங்களின் உழைப்புதான். உங்களின் ஆதரவு இருக்கும்வரை எந்தக்களத்திலும் உங்களில் ஒருவனான என்னால் வென்று காட்ட முடியும். ஒற்றுமையுடன்கூடியஉழைப்பு எப்போதுமே வெற்றியாக விளையும். கழக உடன்பிறப்புகள் அந்த ஒற்றுமையைக் கட்டிக்காத்து உழைத்திட வேண்டும் என்பது கழகத் தலைவர் என்ற முறையில் எனது அன்பு வேண்டுகோளாகும். உங்கள் கோரிக்கைகளைக் கவனிக்க நான் இருக்கிறேன். என்வேண்டுகோளை நிறைவேற்ற நீங்கள் இருக்கிறீர்கள். நம் உயிருக்கு உயிராகத் திராவிட முன்னேற்றக் கழகம் எனும் பேரியக்கம் இருக்கிறது. பேரறிஞர் பெருந்தகை அண்ணாவால் உருவாக்கப்பட்டு, முத்தமிழறிஞர் கலைஞரால் கட்டிக்காக்கப்பட்ட தி.மு.க எனும் பேரியக்கம், நமது மாநிலத்திற்கு மட்டுமல்ல, நாடு முழுவதற்குமான விடியலைத் தர வேண்டிய பொறுப்பில் பங்கேற்றிருக்கிறது. உங்கள் ஆதரவுடன் அந்தப் பொறுப்பை நிறைவேற்ற, உங்களில் ஒருவனான நான் ஆயத்தமாக இருக்கிறேன். காண்கின்ற களம் அனைத்திலும் வெற்றியைக் குவிப்போம். இவ்வாறு கடிதத்தில் மு.க.ஸ்டாலின் எழுதி உள்ளார்.


# அ.தி.மு.க.வை சீரமைக்க இ.பி.எஸ். புதிய திட்டங்கள்



சென்னை, ஆக. 29

அ.தி.மு.க. பொதுச்செயலாளராக தேர்வு செய்யப்பட்ட எடப்பாடி பழனிசாமியை தேர்தல் ஆணையமும் சுப்ரீம் கோர்ட்டும் ஏற்கனவே அங்கீகரித்தநிலையில்சென்னைஐகோர்ட்டில் நிலுவையில் இருந்த வழக்கிலும் அவருக்கு வெற்றி கிடைத்துள்ளது. அ.தி.மு.க. பொதுக்குழு தீர்மானங்களுக்கு எதிராக ஓ.பன்னீர்செல்வம் தாக்கல் செய்திருந்த வழக்கை ஐகோர்ட்டு தள்ளுபடி செய்து உத்தரவிட்டிருப்பதும் ஓ.பன்னீர்செல்வம் நீக்கப்பட்டது செல்லும் என்று கூறியிருப்பதும் எடப்பாடி பழனிசாமிக்கு கிடைத்திருக்கும் முழுமையான வெற்றியாகவே பார்க்கப்படுகிறது. இதை தொடர்ந்து எடப்பாடி பழனிசாமி அ.தி.மு.க.வை முழுமையாக சீரமைப்பதற்காக பல்வேறு அதிரடி திட்டங்களை எடுக்க திட்டமிட்டு உள்ளார். ஜெயலலிதா மரணத்துக்கு பிறகு அ.தி.மு.க.வில் ஏற்பட்ட பல்வேறு குளறுபடிகள் மற்றும் சிக்கல்களை உடைத்தெறிந்து கட்சியை தனது முழு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருக்கும் எடப்பாடி பழனிசாமி அடுத்த ஆண்டு நடைபெற உள்ள பாராளுமன்ற தேர்தலில் தனது பலத்தை நிரூபிக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளார். பா.ஜனதா கூட்டணியில் இடம்பெற்றிருக்கும் அ.தி.மு.க.வை பாராளுமன்ற தேர்தலில் பெரும்பாலான இடங்களில் வெற்றிபெற செய்தால் மட்டுமே ஜெயலலிதா இல்லாத நிலையிலும் அ.தி.மு.க. உயிரோட்டமாக இருக்கிறது என்பதை காட்ட முடியும் என அவர் நம்புகிறார். இதற்காக பல்வேறு அதிரடி திட்டங்களை மனதில் வைத்து அவர் செயல்பட தொடங்கி உள்ளார். அ.தி.மு.க.வின் மாவட்ட செயலாளர்களாக இருப்பவர்கள் தங்களுக்கு கீழ் பணிபுரியும் நிர்வாகிகளைமுழுமையாகஅரவணைத்து செல்ல வேண்டும் என அறிவுறுத்தி உள்ளார். கட்சியின் கொள்கை மற்றும் கோட்பாடுகளுக்கு எதிராக எந்த சூழலிலும் யாரும் செயல்படக் கூடாது என்று தெரிவித்துள்ள எடப்பாடி பழனிசாமி அது போன்ற செயல்களில் யார் ஈடுபட்டாலும் பாரபட்சமின்றி நடவடிக்கை எடுப்பேன் என்பதையும் தெரிவித்து உள்ளார். மாவட்ட செயலாளராக இருப்பவர்கள் தங்கள் பகுதியில் உள்ள பிரச்சனைகளை கையில் எடுத்து அதனை தீர்ப்பதற்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்றும், தேவைப்பட்டால் அதற்காக தங்கள் பகுதியில் போராட்டங்களையும் நடத்த வேண்டும் எனவும் அவர் ஆலோசனைகளை வழங்கி இருக்கிறார். மாவட்ட செயலாளர்கள் இது போன்று செயல்பட்டால் மட்டுமே மக்கள் மனதில் இடம்பிடிக்க முடியும் என்று தெரிவித்துள்ள எடப்பாடி பழனிசாமி செயல்படாத மாவட்ட செயலாளர்களை நீக்கவும் முடிவு செய்திருக்கிறார். இது தொடர்பாக அனைத்து மாவட்ட செயலாளர்களுக்கும் உரிய அறிவுரைகளையும் அவர் வழங்கி உள்ளார். அ.தி.மு.க.வில் உள்ள பல்வேறு அணிகளிலும் காலியாக உள்ள கட்சி பதவிகளை நிரப்பவும் அவர் முடிவு செய்துள்ளார். ஓ.பன்னீர்செல்வம் மற்றும் டி.டி.வி. தினகரன் அணியில் இருந்து மீண்டும் அ.தி.மு.க.வுக்கு திரும்பும் நிர்வாகிகள், தொண்டர்களுக்கு உரிய மதிப்பளித்து அவர்களையும் மாநில நிர்வாகிகள், மாவட்ட பொறுப்பாளர்கள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டு உள்ளது. அதே நேரத்தில் அவர்களது அணியில் தீவிரமாக செயல்படும் நிர்வாகிகளை கண்டறிந்து மீண்டும் அ.தி.மு.க.வில் இணைப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் அ.தி.மு.க. தலைமை அறிவுறுத்தி இருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. கட்சியில் ஏற்பட்டிருந்த சட்ட சிக்கல்களில் முழுமையான வெற்றியை பெற்றிருக்கும் எடப்பாடி பழனிசாமி எந்த சூழலிலும் அதனை விட்டுக்கொடுக்காமல் அ.தி.மு.க. பொதுச்செயலாளருக்கான அதிகாரத்தை முழுமையாக கட்சியில் செயல்படுத்த தனி ஆர்வம் காட்டி வருவதாக கட்சியின் மூத்த நிர்வாகி ஒருவர் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் கூறும் போது, எடப்பாடி பழனிசாமியை பொருத்தவரை நிர்வாகிகளை அரவணைத்து செல்வதில் பெயர் பெற்றவர். அதே நேரத்தில் கட்சிக்கு விரோதமாக செயல்பட்டால் விடமாட்டார் என்றார். வருகிற பாராளுமன்ற தேர்தல் வெற்றி சட்டமன்ற தேர்தலுக்கான முன்னோட்டம் என்பதை உணர்ந்து நிர்வாகிகள் செயல்படவேண்டும்எனபலகூட்டங்களில் எடப்பாடி பழனிசாமி தெரிவித்து இருக்கிறார். வரும் காலங்களில் பாராளுமன்ற தேர்தலுக்கான வியூகத்தையும், வேகத்தையும் அவர் தீவிரப்படுத்த உள்ளார். இதன் மூலம் தனது செல்வாக்கு என்ன என்பதையும், எம்.ஜி.ஆ.ரால் தொடங்கப்பட்டு ஜெயலலிதாவால் வழிநடத்தப்பட்டஅ.தி.மு.க.வைஅடுத்த கட்டத்துக்கு கொண்டு செல்வதற்கும் எடப்பாடி பழனிசாமி முழு வீச்சில் தயாராகிவிட்டார் எனவும் தெரிவித்தார். அ.தி.மு.க.வில்இளைஞர், இளம்பெண்கள் பாசறையை ஜெயலலிதா உருவாக்கி அதற்கு மிகுந்த முக்கியத்துவமும் அளித்தார். அவரது பாணியில் எடப்பாடி பழனிசாமி செயல்பட முடிவு செய்திருக்கிறார். இதை தொடர்ந்து புதிதாக வாக்களிக்க தயாராகும் இளம் வாக்காளர்களையும், இளம் பெண்களையும் கட்சியில் அதிக அளவில் சேர்த்து அ.தி.மு.க.வுக்கு புதுரத்தம் பாய்ச்ச வேண்டும் என்றும் கட்சியினருக்கு உத்தரவிட்டு உள்ளார். எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா காலத்து அ.தி.மு.க. மூத்த நிர்வாகிகள் கட்சியின் கொள்கைகளை இளைஞர்கள், இளம் பெண்களிடம் அதிக அளவில் கொண்டு சேர்க்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டு உள்ளது. இதுபோன்ற செயல்பாடுகளால் நிச்சயம் அ.தி.மு.க.வை மீண்டும் தமிழகத்தில் ஆட்சி கட்டிலில் அமர வைக்க முடியும் எனவும் நிர்வாகிகளிடம் எடப்பாடி பழனிசாமி நம்பிக்கை தெரிவித்துள்ளார். தற்போது சமூக ஊடகங்கள் மக்கள் மத்தியில் அதிக அளவில் பிரபலமாக இருப்பதால் அதன்மூலமாக கடந்த கால அ.தி.மு.க. அரசின் சாதனைகளையும் தி.மு.க. ஆட்சியில் செயல்படுத்தப்படாமல் இருக்கும் திட்டங்களையும் மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும் எனவும் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துஉள்ளார். இதற்காகஅ.தி.மு.க தகவல் தொழில்நுட்ப அணியை மேலும் பலப்படுத்த பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. தகவல் தொழில்நுட்ப அணிக்கு தேவையான கணினி உள்ளிட்ட சாதனங்களை கூடுதலாக வாங்குவதற்கு முடிவு செய்யப்பட்டு உள்ளது. அ.தி.மு.க.வில் கொள்கை பிடிப்போடு இருக்கும் இளைஞர்களை தகவல் தொழில்நுட்ப அணியில் அதிகம் சேர்த்து அவர்கள் மூலமாக எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா ஆட்சியில் மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள், எடப்பாடி பழனிசாமி ஆட்சியில் நிறைவேற்றப்பட்ட நலப்பணிகள் ஆகியவற்றை மக்கள் மத்தியில் கொண்டு சேர்க்கவும் அறிவுறுத்தப்பட்டு உள்ளது. தமிழகத்தில் 2026ம் ஆண்டு நடைபெற உள்ள சட்டமன்ற தேர்தலை மனதில் வைத்து இப்போதே நிர்வாகிகள், தொண்டர்கள் செயல்பட வேண்டும் என்றும் நாம் தீவிரமாக கட்சிப்பணியையும், மக்கள் பணியையும் சேர்ந்து ஆற்றினால் நிச்சயம் தமிழகத்தில் ஆட்சியில் அமர முடியும் எனவும் நிர்வாகிகள் மத்தியில் எடப்பாடி பழனிசாமி நம்பிக்கையூட்டும் வகையில் பல கருத்துக்களை தெரிவித்திருக்கிறார். சமீபத்தில் மதுரையில் பிரமாண்டமாக மாநாடு நடத்தி தொண்டர்களிடையே எழுச்சியை ஏற்படுத்திய நிலையில் எடப்பாடி பழனிசாமியின் புதிய அதிரடி பாய்ச்சல் அ.தி.மு.க.வுக்கு புத்துணர்ச்சி ஏற்படுத்தும் வகையில் அமைந்திருப்பதாக கட்சி நிர்வாகிகள் தெரிவித்து உள்ளனர்.

## நிலவின் மேற்பரப்பில் பள்ளத்தை தவிர்த்த பிரக்யான் ரோவர் இஸ்ரோவின் புது அப்டேட்



டெல்லி, ஆக. 29

நிலவின் தென் துருவத்தில் சந்திரயான் 3இன் விக்ரம் லேண்டர் கடந்த 23ம் தேதி வெற்றிகரமாக தரையிறங்கியது. இதையடுத்து, விக்ரம் லேண்டரில் இருந்து வெளிவந்த பிரக்யான் ரோவர் அதன் ஆராய்ச்சி பணிகளை தொடங்கியது. பிரக்யான் ரோவர் நிலவில் 14 நாட்களுக்கு ஆய்வு பணியை மேற்கொள்ளும் வகையில் இஸ்ரோ அதனை உருவாக்கி இருக்கிறது. அதன்படி, ரோவர் நிலவின் மண்ணில் நகர்ந்து ஆய்வு செய்து வருகிறது. இதற்கிடையே, விக்ரம் லேண்டர் தரையிறங்கும் போது எடுத்த புகைப்படம், இறங்கிய பிறகு எடுத்த புகைப்படம், ரோவர் வெளியேறும் வீடியோ உள்ளிட்டவைகளை இஸ்ரோ வெளியிட்டு வருகிறது.

இந்நிலையில், "நிலவின் மேற்பரப்பில் 4 மீட்டர் விட்டம் கொண்ட பள்ளத்தை பிரக்யான் ரோவர் சாதுர்யமாக தவிர்த்தது என்றும், 3 மீட்டர் தூரத்துக்கு முன்பாகவே துல்லியமாக கண்டறிந்ததால் பாதையை மாற்றிக் கொண்டு சமதள பாதையில் நகர்ந்து சென்றது என்றும் இஸ்ரோ தெரிவித்து இருக்கிறது. முன்னதாக நிலவின் வெப்பநிலையை விக்ரம் லேண்டர் தொடர்ந்து கண்காணித்து வருவதாக இஸ்ரோ தெரிவித்து இருந்தது. விக்ரம் லேண்டரில் உள்ள 10 சென்சார் கருவிகள் மூலம் வெப்பநிலை ஆய்வு செய்யப்படுவதாகவும், நிலவின் மேற்பரப்பில் உள்ள வெப்பநிலையை விக்ரம் லேண்டர் ஆய்வு செய்து வருவதாகவும் இஸ்ரோ தெரிவித்து இருந்தது.

## 40 அடி உயர சுவரிலிருந்து குதித்து தப்பிய கைதி: 24 மணி நேரத்தில் தட்டித் தூக்கிய போலீஸ்



கர்நாடகா, ஆக. 29

கர்நாடகாவின் மத்திய பகுதியில் உள்ள நகரம் தாவணகெரே. இங்குள்ள மகளிர் காவல் நிலையத்திற்கு ஒரு பாலியல் தாக்குதல் புகார் வந்தது. புகாரை விசாரித்த காவல் அதிகாரிகள், அது உண்மை என கண்டறிந்து வசந்த் என்பவரை கைது செய்து தாவணகெரே நகர சப்ஜெயிலில் அடைத்தனர். அந்த சிறையின் சுற்றுச்சுவர் 40 அடி உயரம் கொண்டது. இந்த சிறையில் நேற்று முன்தினம் குறைந்த அளவே சிறை காவல் அதிகாரிகள் இருந்தனர். விடுமுறை தினம் என்பதால் வெளியிலும் குறைவான அளவே கடைகள் திறந்திருந்தன. இதனையறிந்து வசந்த் சிறையிலிருந்து தப்பிக்க திட்டம் தீட்டினார். அதன்படி, 40அடிஉயரசுற்றுச்சுவரைசிறைக்குள்எப்படியோஏறியவசந்த்,தப்பிப்பதற்காக அதன் உச்சியிலிருந்து துணிந்து கீழே குதித்தார். இந்த முயற்சியில் கீழே விழுந்த அவருக்கு காலில் காயம் ஏற்பட்டது. இருந்தும் அங்கிருந்து வெளியே சென்று ஒரு ஆட்டோ ரிக்ஷாவில் ஏறி தப்பித்து சென்றார். இதையடுத்து சிறைக்கைதி தப்பி சென்றதாகவும், அவரை கண்டுபிடிக்க வேண்டும் எனவும் பசவநகர் காவல் நிலையத்தில் சிறைத்துறையால் ஒரு புகார் அளிக்கப்பட்டது. வசந்த் ஏறி குதித்த காட்சியும், காலில் அடிபட்டாலும் தப்பி செல்வதும், சிறையின் சுற்றுச்சுவர் அருகே ஆங்காங்கே வைக்கப்பட்டு இருந்த கண்காணிப்பு கேமிராவில் பதிவாகியிருந்தது. இதனை கொண்டும், விசாரணையின் மூலமாகவும் வசந்த் ஹரிஹராதாலுக்காவில் உள்ளதுக்காவதி பகுதிக்கு சென்று இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. அங்கு சென்ற காவல்துறையினர் அவர் பதுங்கி இருந்த இடத்தை கண்டுபிடித்து அவரை கைது செய்து பசவநகர் காவல் நிலையம் கொண்டு வந்தனர். துரிதமாக செயல்பட்டு தப்பி சென்ற கைதியை 24 மணி நேரத்தில் காவல்துறை மீண்டும் பிடித்தது பலராலும் பாராட்டப்படுகிறது. அதே நேரம், வசந்த் சிறையிலிருந்து தப்பிக்க உயரமான சுவற்றிலிருந்து கீழே குதிப்பதும், காலில் அடிபடுவதும் பதிவான காட்சி அடங்கிய கண்காணிப்பு கேமரா வீடியோ சமூக வலைதளங்களில் பரவி வருகிறது.

## கட்டுப்பாட்டு மையங்களில் தொழில்நுட்பக் கோளாறு... பிரிட்டனில் விமான சேவை பாதிப்பு

பிரிட்டன், ஆக. 29

தொழில்நுட்ப கோளாறு காரணமாக விமான சேவை முழுமையாக முடங்கவில்லை. கட்டுப்பாட்டு மைய தொழில்நுட்ப கோளாறு பெரிய அளவில் பாதிப்பை ஏற்படுத்தி இருக்கிறது. பிரிட்டன் நாட்டின் வான் போக்குவரத்து கட்டுப்பாட்டு மையங்களில் தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டதால், விமான சேவை பெரிதும் பாதிக்கப்பட்டது. தொழில்நுட்ப கோளாறு காரணமாக விமான திட்டங்களை வழக்கம் போல் தானியங்கி முறையில் இயக்க முடியாமல் போனது. இதன் காரணமாக விமானிகள் விமானத்தைஇயக்கும்வழித்தடம்பற்றியதகவல்களைதரைக்கட்டுப்பாட்டு மையத்துக்கு தெரிவிப்பதில் சிக்கல் ஏற்பட்டது. கட்டுப்பாட்டு மையத்தில் ஏற்பட்ட தொழில்நுட்ப கோளாறு காரணமாக விமான சேவை முழுமையாக முடங்கவில்லை என்ற போதிலும், பல்வேறு விமானங்கள் ரத்து செய்யப்பட்டும், பல விமானங்கள் தாமதமாகவும் கிளம்பி செல்ல நேர்ந்தது. இதன் காரணமாக பயணிகள் பெரிய அளவில் பாதிக்கப்பட்டனர். திங்கள் கிழமை தினத்தில் வான் போக்குவரத்து அதிக பரபரப்பாக இருக்கும் என்பதால், கட்டுப்பாட்டு மைய தொழில்நுட்ப கோளாறு பெரிய அளவில் பாதிப்பை ஏற்படுத்தி இருக்கிறது. இது ஒருபுறம் இருந்த போதிலும், தொழில்நுட்ப கோளாறை விரைந்து சரி செய்யும் பணிகளும் மும்முரமாக நடைபெற்று வருகின்றன.

# சப்இன்ஸ்பெக்டர் தேர்வில் முறைகேட்டில் ஈடுபட்ட பயிற்சி போலீஸ்காரர் சஸ்பெண்டு

கோவை,ஆக.29

கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூரில் உள்ள ஒரு தனியார் கல்லூரியிலும் இந்த தேர்வானது நடந்தது. சப்இன்ஸ்பெக்டர் தேர்வினை 3 முறை எழுதியும் ஒரு சில மதிப்பெண்கள் வித்தியாசத்தில் தோல்வி அடைந்து விட்டேன்.

தமிழகம் முழுவதும் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் போலீஸ் சப் இன்ஸ்பெக்டருக்கான எழுத்து தேர்வு நடந்தது. கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூரில் உள்ள ஒரு தனியார் கல்லூரியிலும் இந்த தேர்வானது நடந்தது. அங்குள்ள மையத்தில் ஏராளமானோர் இந்த தேர்வினை எழுதினர். அப்போது ஒரு தேர்வறையில் இருந்த வாலிபர் ஒரு கருப்பு கலரில் வித்தியாசமான முறையில் முக கவசம் அணிந்திருந்தார். முக கவசம் என்பதால் கண்காணிப்பாளர்களும் விட்டு விட்டனர். சிறிது நேரத்தில் அறைக்குள் இருந்து வித்தியாசமான குரல் கேட்டது. இது அங்கு பணியில்



இருந்த கண்காணிப்பாளர்களுக்கு சந்தேகத்தை ஏற்படுத்தியது.

இதையடுத்து கண்காணிப்பாளர்கள், ஒவ்வொரு தேர்வர்களின் அருகிலும் சென்று சோதனை செய்தனர். அப்போது முக கவசம் அணிந்திருந்த வாலிபர் அருகில் தான் அந்த சத்தம் வந்தது தெரிய வந்தது.

உடனே கண்காணிப்பாளர்கள் அந்த வாலிபரை அழைத்து சென்று சோதனை செய்தனர். அப்போது அந்த வாலிபர், காதில் சிம்கார்டுன் கூடிய வாய்ஸ் மீட்டரை (ஹெட் போன்) வைத்திருந்தார். அதன்மூலம் வெளியில் இருந்து இவருக்கு ஒருவர் பதில் சொல்ல, அதனை கேட்டு, இவர் தேர்வு எழுதியது கண்டுபிடிக்கப்பட்டது. இதையடுத்து போலீசார் விசாரணை மேற்கொண்டனர். விசாரணையில், வாய்ஸ் மீட்டரை பயன்படுத்தி தேர்வு எழுதியது, ஊத்தங்கரை அடுத்த சாமல்பட்டி பச்சூரை சேர்ந்த நவீன் (வயது26) என்பது தெரிய வந்தது. இவர் கோவை கோவைப்புதூரில் உள்ள போலீஸ் பயிற்சி மையத்தில் பயிற்சி காவலராக பணியாற்றி வந்ததும் தெரியவந்தது. இதுதொடர்பாக போலீசார் அவரிடம் விசாரணை மேற்கொண்டனர். அப்போது, நான் கடந்த 2016ம் ஆண்டு முதல் தேர்வு எழுதி வருகிறேன். சப்இன்ஸ்பெக்டர் தேர்வினை 3 முறை எழுதியும் ஒரு சில மதிப்பெண்கள் வித்தியாசத்தில் தோல்வி அடைந்து விட்டேன். இந்த முறை எப்படியாவது தேர்வில் வெற்றி பெற வேண்டும் என நினைத்தேன். அதற்காக வாய்ஸ்மீட்டரை பயன்படுத்தி எழுதலாம் என முடிவு செய்தேன். அதன்படி தேர்வு அன்று, எனது தங்கை தேர்வறைக்கு வெளியில் இருந்து பதில்களை சொல்ல சொல்ல, அதனை வாய்ஸ் மீட்டர் வழியாக கேட்டு நான் தேர்வு எழுதினேன் என தெரிவித்தார். இதையடுத்து போலீசார் பயிற்சி காவலர் நவீன் மற்றும் அவருக்கு உதவிய தங்கை சித்ரலேகா ஆகியோரை போலீசார் கைது செய்தனர்.

இதற்கிடையே சப் இன்ஸ்பெக்டர் தேர்வில் முறைகேட்டில் ஈடுபட்ட பயிற்சி காவலர் நவீனை சஸ்பெண்டு செய்து கோவைப்புதூர் போலீஸ் பயிற்சி மைய போலீஸ் சூப்பிரண்டு உத்தரவிட்டுள்ளார்.

# அரசு பள்ளியில் மின்சாரம் தாக்கி பாதித்த மாணவியின் மருத்துவ செலவை முழுமையாக ஏற்ற மேயர்

திருப்பூர்,ஆக.29

மாணவியின் குடும்ப சூழ்நிலையை கருத்தில் கொண்டு ரூ.25 ஆயிரம் வழங்கினார். ஜோஸ்லின் ஹெனியா செரங்காட்டில் உள்ள அரசு நடுநிலைப் பள்ளியில் 8ம் வகுப்பு படித்து வருகிறார்.

திண்டுக்கல் மாவட்டம் குட்டத்துபட்டியை சேர்ந்தவர் டேவிட்ராஜ்ரூபிஜெனிபர். இந்த தம்பதியின் மகள் ஜோஸ்லின்



தினேஷ்குமார்

ஹெனியா (வயது 14). டேவிட்ராஜ் தனது குடும்பத்துடன் திருப்பூர் செரங்காட்டில் குடியிருந்து வருகிறார். இவருடைய மகள் ஜோஸ்லின் ஹெனியா செரங்காட்டில் உள்ள அரசு நடுநிலைப்பள்ளியில் 8ம் வகுப்பு படித்து வருகிறார். இவர் பள்ளி கழிவறைக்கு சென்ற போது மின்சாரம் தாக்கி காயம் அடைந்து திருப்பூர் அரசு ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்தார். இந்த நிலையில் மாணவிக்கு செவித்திறன் பாதிக்கப்பட்டது தெரியவந்தது. மேலும் கழுத்து, கை பகுதியில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதை அறிந்த மேயர் தினேஷ்குமார் திருப்பூரில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதித்து மருத்துவ செலவை முழுமையாக ஏற்றுக்கொண்டார். அது மட்டுமின்றி அந்த மாணவியின் குடும்ப சூழ்நிலையை கருத்தில் கொண்டு ரூ.25 ஆயிரம் வழங்கினார்.

## ஓணம் பண்டிகை:

# உடுமலையில் காய்கறிகள் வாங்க குவிந்த கேரள வியாபாரிகள்

உடுமலை,ஆக.28

இடுக்கி மாவட்டம் மூணாரில் உள்ள அனைத்து தங்கும் விடுதிகளும் ஓணம் பண்டிகை விடுமுறை காரணமாக நிரம்பி வருகின்றன. கூட்ட நெரிசலை தவிர்க்க கேரளாவிற்கு கூடுதல் பஸ்கள் இயக்க வேண்டும் என கேரள வாழ் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

திருப்பூர் மாவட்டம் உடுமலை வழியாக கேரள மாநிலம் மூணாறுக்கு நாள்தோறும் நூற்றுக்கணக்கான வாகனங்கள் சென்று வருகின்றன. வேலை மற்றும் பல்வேறு பொருட்கள் வாங்குவதற்காக கேரள மக்கள் தினமும் உடுமலைக்கு வருகின்றனர். தற்போது கேரள மாநிலம் முழுவதும் ஓணம் பண்டிகை கொண்டாட்டம் களை கட்டி உள்ளது. இதனால்



பண்டிகைக்காக தேவையான பொருட்களை வாங்குவதற்காக கேரள மக்கள் உடுமலையில் குவிந்து வருகின்றனர். இதன் காரணமாக உடுமலை உழவர் சந்தை மற்றும் தினசரி மார்க்கெட், மத்திய பேருந்து நிலையம் எதிரே அமைந்துள்ள கடை வீதிகளில் கேரள மக்கள்வியாபாரிகள் கூட்டம் அலை மோதுகிறது. அவர்கள் காய்கறிகள், பழங்கள், இனிப்புகள் மற்றும் புத்தாடைகளை வாங்கி வருகின்றனர். கேரள மாநிலம் மறையூர், காந்தலூர், மூணாறு செல்லும் பஸ்களில் பயணிகளின் கூட்டம் நிரம்பி வழிகிறது. குறிப்பாக 9/6 செக் போஸ்ட்வழியாககேரளா மாநிலம் செல்வதற்காக தனியார் ஜீப்புகளில் பயணிகள் அதிக அளவு வந்து செல்கின்றனர். இடுக்கி மாவட்டம் மூணாரில் உள்ள அனைத்து தங்கும் விடுதிகளும் ஓணம் பண்டிகை விடுமுறை காரணமாக நிரம்பி வருகின்றன. அங்குள்ள ஓட்டல்களில் கலை நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஓணம் பண்டிகை விருந்துக்காக காய்கறிகள், பழங்கள், மளிகை பொருட்கள், வெல்லம், பூக்கள் உள்ளிட்டவற்றை வாங்கி விற்பனை செய்வதற்காக மாநில எல்லையோரம் கடை வைத்துள்ள வியாபாரிகள் உடுமலையில் குவிந்து, மூட்டை மூட்டையாக பொருட்களை வாங்கி சென்றனர். ஓணம் பண்டிகை கொண்டாட கேரள மாநிலம் செல்வதற்காக குவிந்த பொது மக்களால் உடுமலை பஸ் நிலையத்தில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. கூட்ட நெரிசலை தவிர்க்க கேரளாவிற்கு கூடுதல் பஸ்கள் இயக்க வேண்டும் என கேரள வாழ் பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# மின் கட்டணத்தை குறைக்க தொழில் துறையினர் கோரிக்கை

திருப்பூர்,ஆக.29

கட்டணத்தை குறைக்க வலியுறுத்தி முதல்வருக்கு கோரிக்கை மனு அனுப்ப தீர்மானிக்கப்பட்டுள்ளது. 50க்கும் மேற்பட்ட தொழில் நிறுவனங்களை சேர்ந்த உரிமையாளர்களுடன் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

தமிழகத்தில் கடந்த ஆண்டு உயர்த்தப்பட்ட மின் கட்டணத்தை குறைக்க வேண்டும் என தொழில் துறையினர் அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர். இதுகுறித்து நாடா இல்லா தறி நெசவாளர்




சங்க (சிஸ்வா) ஒருங்கிணைப்பாளர் கோவிந்தராஜ் கூறியதாவது: மின் கட்டண உயர்வால் குறு, சிறுதொழில்நிறுவனங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் கோவை, திருப்பூர், ஈரோடு மாவட்டங்களில் உள்ள தென்னை நார் உற்பத்தி சார்ந்த தொழிற்சாலைகள், நிட்டிங், ஓ.இ. மில்கள், ஸ்பின்னிங் மில்கள், கல்குவாரி உள்ளிட்ட 50க்கும் மேற்பட்ட குறு, சிறு தொழில் நிறுவனங்களை சேர்ந்த உரிமையாளர்களுடனான ஆலோசனை கூட்டம் அண்மையில் கோவையில் நடைபெற்றது.

இதில் மின் கட்டணத்தால் ஏற்படும் பாதிப்புகள் குறித்தும், கட்டணத்தை குறைக்க வலியுறுத்தியும் முதல்வருக்கு கோரிக்கை மனு அனுப்ப தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றார்.

# ஆரம்ப சுகாதார மையங்களில் தற்காலிக பணிக்கு ஆட்கள் தேர்வு

திருப்பூர்,ஆக.29

நேர்காணல் வருகிற 11ந் தேதி காலை 10 மணி முதல் மாலை 3 மணி வரை மாநகராட்சி மைய அலுவலகத்தில் நடக்கிறது. கூடுதல் விவரங்களுக்கு 0421 224 0153 என்ற தொலை பேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருப்பூர் மாநகராட்சி ஆரம்ப சுகாதார மையங்களில் காலியாக உள்ள செவிலியர் உள்ளிட்ட பணியிடங்களுக்கு தற்காலிக அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட வுள்ளது. நேர்காணல் வருகிற 11ந் தேதி காலை 10 மணி முதல் மாலை 3 மணி வரை மாநகராட்சி மைய அலுவலகத்தில் நடக்கிறது. செவிலியர் பணியிடம் 14 பேர் (சம்பளம் ரூ.14 ஆயிரம் ). தகுதி பி.எஸ்சி., நர்சிங், அல்லது எ.என்.எம்., அல்லது டி.ஜி.என்.எம்., படிப்பு. லேப் டெக்னீஷியன் 2 பேர். (சம்பளம் ரூ. 13 ஆயிரம் ). தகுதி மெடிக்கல் லேப் டெக்னாலஜியில் பி.எஸ்சி., அல்லது டிப்ளமோ. மருத்துவமனை பணியாளர் ஒருவர். (சம்பளம் 8,500 ரூபாய்). தகுதி குறைந்தபட்சம், 8ம் வகுப்பு தேர்ச்சி. கூடுதல் விவரங்களுக்கு 0421 224 0153 என்ற தொலை பேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பொதுசிவில் சட்ட முன்னெடுப்புகளை மத்திய அரசு கைவிட வேண்டும் தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத் வலியுறுத்தல்

திருப்பூர்,ஆக.29

பயோமெட்ரிக்ஆய்வை ஆகஸ்ட் 20 நதேதிக்குள் முடிக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மணிப்பூர் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயமான நிவாரணத்தை மத்திய அரசு வழங்க வேண்டும்

தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத் திருப்பூர் மாவட்ட செயல்வீரர்கள் கூட்டம் கோப்பைத் தோட்டத்தில் உள்ள பள்ளி வாசல் வளாகத்தில் நடைபெற்றது. கூட்டத்துக்கு மாவட்டத் தலைவர்நூர்தீன்தலைமை வகித்தார். இதில், மத்திய அரசின் சிறுபான்மை நலத்துறை சார்பில் மாணவர்களுக்கு வழங்கப்படும் கல்வி உதவித்தொகையைப் பெறுவதற்கு பயோ




மெட்ரிக் முறையில் தங்களது அடையாளத்தை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும் என வழிகாட்டுதல் வழங்கப்பட்டுள்ளது. இந்த பயோமெட்ரிக் ஆய்வை ஆகஸ்ட் 20 நதேதிக்குள் முடிக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் 20 லட்சம் மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக இஸ்லாமிய, கிறிஸ்தவ, சீக்கிய, பௌத்த மாணவர்கள் அதிக அளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கானகாலஅவகாசத்தை நீட்டிக்க மத்திய அரசுக்கு மாநில அரசு அழுத்தம் கொடுக்க வேண்டும். மணிப்பூர் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயமான நிவாரணத்தை மத்திய அரசு வழங்க வேண்டும். நாட்டின் இறையாண்மைக்கும், தேச ஒற்றுமைக்கு எதிராகவும் பொது சிவில் சட்டம் அமைந்துள்ளது. பொது சிவில் சட்டம் தொடர்பான முன்னெடுப்புகளை மத்திய அரசு கைவிட வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இந்தக்கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் யாசர் அராபத், பொருளாளர் சிராஜ்தீன், மாவட்ட துணைத் தலைவர் ஜாகிர் அப்பாஸ், துணைச் செயலாளர்கள் ஷேக் பரீத், ஷாஜகான், காஜா, ஜெய்லானி, ஹனீபா உள்ளிட்ட நிர்வாகிகள் பலர் பங்கேற்றனர்.

# தீண்டாமை வன்கொடுமை தடுப்பு சட்டத்தில் வழக்குப்பதிவு செய்ய கோரிக்கை

பெருமாநல்லூர்,ஆக.29

குழந்தைகளுக்கு மாற்றுச் சான்றிதழை கேட்டு சிலர் பிரச்சினையில் ஈடுபட்டுள்ளனர்.

பட்டியலின பெண் சமைக்கும் உணவை தங்கள் பிள்ளைகள் சாப்பிடுவதை ஒப்புக்கொள்ள மாட்டோம். திருப்பூரில் அரசுப் பள்ளியில் பட்டியலின பெண் சமைத்த உணவை சாப்பிட விடாமல் தடுத்தவர்கள் மீது தீண்டாமை வன்கொடுமை தடுப்பு சட்டத்தில் வழக்குப் பதிவு செய்ய வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து தமிழக முதல் அமைச்சர், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் உள்ளிட்டோருக்கு அனைத்து பொது தொழிலாளர் நல அமைப்பின் பொதுச் செயலாளர் அ.சரவணன் அனுப்பியுள்ள மனுவில் கூறியுள்ளதாவது: திருப்பூர் மாவட்டம், பெருமாநல்லூர் அருகேயுள்ள வள்ளிபுரம் ஊராட்சி காளிங்கராயன்பாளையத்தில் உள்ள அரசுப் பள்ளியில் முதல்வரின் காலை உணவுத் திட்டம் அண்மையில் தொடங்கப்பட்டது. இதில், பட்டியலினத்தைச்சேர்ந்த பெண் உணவு சமைத்ததால், அதனை சாப்பிட விடாமல் தடுத்து குழந்தைகளுக்கு மாற்றுச் சான்றிதழை கேட்டு சிலர் பிரச்சினையில் ஈடுபட்டுள்ளனர். பட்டியலின சமூகத்தைச் சேர்ந்தவர் என்பதற்காக அவர் சத்துணவு சமைக்கக் கூடாது என்றும், அவர் சமைக்கும் உணவை தங்கள் பிள்ளைகள் சாப்பிடுவதை ஒப்புக்கொள்ள மாட்டோம் என்றும் சிலர் பிரச்சினைகள் செய்வது ஏற்புடையதல்ல.

எனவே, இதுகுறித்து உரிய விசாரணை நடத்தி உணவை சாப்பிட விடாமல் தடுத்தவர்கள் மீது தீண்டாமை வன்கொடுமை தடுப்பு சட்டத்தில் வழக்குப்பதிவு செய்ய வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இ.எஸ்.ஐ. மருத்துவமனை அருகில் உள்ள டாஸ்மாக் கடையை அகற்றக்கோரி ஆர்ப்பாட்டம்

திருப்பூர்,ஆக.29

திருப்பூர் கொங்கு பிரதான சாலை இ.எஸ்.ஐ. மருத்துவமனை அருகில் மதுபானக்கடை செயல்பட்டு வருகிறது.

குடியிருப்புகள் பகுதியில் செயல்பட்டு வரும் இந்தக் கடையால் பொதுமக்கள் நாள்தோறும் பல்வேறு பிரச்னைகளை சந்தித்து வருகின்றனர். மதுக்கடையை அகற்றக் கோரி டாஸ்மாக் மாவட்ட மேலாளர், மாவட்ட கலெக்டர் ஆகியோரிடம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினர் மனு அளித்தனர். ஆனால், இதுவரை டாஸ்மாக் மதுக்கடை அகற்றப் படவில்லை.

இந்நிலையில், மதுக்கடையை அகற்றக்கோரி இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்துக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் இரண்டாவது மண்டலக்குழு செயலாளர் வி.எஸ்.சசிகுமார் தலைமை வகித்தார். பொதுமக்களுக்கு இடையூறாக உள்ள மதுக்கடையை அகற்றாவிட்டால் தொடர் போராட்டத்தில் ஈடுபடுவோம் என்று ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றவர்கள் தெரிவித்தனர்.

இதில் மாநகராட்சி துணை மேயரும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினருமான பாலசுப்பிரமணியம், மாநகர் மாவட்ட குழு செயலாளர் ரவிசந்திரன், ஏஐடியூசி., மாவட்டத்தலைவர் மோகன் மற்றும் 100க்கும் மேற்பட்ட பெண்கள் பங்கேற்றனர்.

# திருப்பூர் பின்னலாடை ஏற்றுமதி நிறுவனத்தில் தீ விபத்து: பல லட்சம் மதிப்புள்ள ஆடைகள் எந்திரங்கள் எரிந்து நாசம்

திருப்பூர்,ஆக.29

திருப்பூர் தெற்கு தீயணைப்புநிலையத்துக்கும், வீரபாண்டி போலீஸ் நிலையத்துக்கும் தகவல் தெரிவித்தனர். தீ விபத்து குறித்து வீரபாண்டி போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

திருப்பூர்வீரபாண்டியை அடுத்த பலவஞ்சி பாளையத்தில்தனியாருக்கு சொந்தமான பின்னலாடை ஏற்றுமதி நிறுவனம் செயல்பட்டு வருகிறது. இங்கு 100க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணியாற்றி வருகின்றனர்.



இந்நிலையில் ஏற்றுமதி நிறுவனத்தில் இருந்து பல அடி தொலைவுக்கு கரும் புகை எழுந்தது.

இது குறித்து அந்த வழியாக சென்றவர்கள் திருப்பூர் தெற்கு தீயணைப்பு நிலையத்துக்கும், வீரபாண்டி போலீஸ் நிலையத்துக்கும் தகவல் தெரிவித்தனர்.

இதையடுத்து சம்பவ இடத்துக்கு வந்த தீயணைப்பு வீரர்கள் தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர். தீயின் வேகம் அதிகமாக இருந்ததால் 2 மணி நேரத்துக்கும் மேலாக தீயை அணைக்கும் பணியில் தீயணைப்பு வீரர்கள் ஈடுபட்டனர். இந்த தீ விபத்தில் ஏற்றுமதிக்காக வைக்கப்பட்டிருந்த பல லட்சம் ரூபாய் மதிப்பிலான பின்னலாடைகள், எந்திரங்கள் எரிந்து சேதமடைந்ததாக கூறப்படுகிறது. இந்த தீ விபத்து குறித்து வீரபாண்டி போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# திருப்பூர் மாநகராட்சியில் நகர சுகாதார செவிலியர் பணிக்கு விண்ணப்பிக்கலாம்

திருப்பூர்,ஆக.29

காலை 10 மணி முதல் மதியம் 3 மணி வரை நேர்காணல் நடைபெற உள்ளது. முன் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்று மாநகராட்சி சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருப்பூர் மாநகராட்சியில் தேசிய நகர்ப்புற சுகாதார திட்டத்தின் கீழ் செயல்பட்டு வரும் நகர்ப்புற ஆரம்ப சுகாதாரநிலையங்களில்காலியாகஉள்ள பணியிடங்கள் மாநகர நல சங்கம் மூலமாக ஒப்பந்த அடிப்படையில் நிரப்பப்பட உள்ளது. 14 நகர சுகாதார செவிலியர்கள் பணியிடத்துக்கு பி.எஸ்சி.நர்சிங், நர்சிங்



மிட்வைப் பயிற்சி, டிப்ளமோ நர்சிங் அன்ட் மிட்வைப் பயிற்சி பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம். 2 ஆய்வக அலுவலர், 1 மருத்துவ பணியாளர் பணியிடமும்நிரப்பப்பட உள்ளது.

வருகிற 11ந் தேதி திருப்பூர் மாநகராட்சி சுகாதார பிரிவில் காலை 10 மணி முதல் மதியம் 3 மணி வரை நேர்காணல் நடைபெற உள்ளது.

தகுதிவாய்ந்த நபர்கள் இந்த நேர்காணலில் தங்களது அசல் சான்றிதழ், ஆதார் கார்டு நகல், பாஸ்போர்ட் அளவு புகைப்படம் ஆகியவற்றுடன் கலந்து கொள்ள வேண்டும். இதுகுறித்த மேலும் விவரங்களுக்கு 0421 2240153 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம். நேர்காணலுக்கு வருபவர்களிடம் 10ம் வகுப்பு, 12 ம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ், கல்விச்சான்றிதழ், தமிழ்நாடு மருத்துவ குழும பதிவு சான்றிதழ், ஆதார் கார்டு நகல், ரேஷன் கார்டு நகல் சரி பார்க்கப்படும்.

முன் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்று மாநகராட்சி சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கோத்தகிரியில் மக்கள் அதிகாரம் சார்பில் நீட் தேர்வை கண்டித்து ஆர்ப்பாட்டம்

நீலகிரி, ஆக. 29

மக்கள் அதிகாரம் நிர்வாகி ஆனந்தராஜ், ராஜா, மாவட்ட இணை செயலாளர் வெங்கட் உள்பட 20க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர் தனியார்மய போக்கின் ஒரு பகுதியாக நீட் தேர்வு உள்ளதால், ஜல்லிக்கட்டு போல மக்களை திரட்டி போராட்டம் நடத்துவோம் என எச்சரிக்கை விடுத்தனர். அரவேணு நீலகிரி மாவட்டம் கோத்தகிரி மார்க்கெட் திடல் பகுதியில் நீட் தேர்வை கண்டித்து மக்கள் அதிகாரம்



சார்பில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. இதில் அந்த அமைப்பின் நிர்வாகி ஆனந்தராஜ், ராஜா, மாவட்ட இணை செயலாளர் வெங்கட், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மண்டல பொறுப்பாளர் மன்னரசன், பெண்கள் இணைப்பு குழுவின் சாரா உள்பட 20க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். ஆர்ப்பாட்டத்தில் இந்தியா முழுவதும் நீட் தேர்வை ரத்து செய்ய வேண்டும் என்பவை உள்ளிட்ட பல்வேறு முழக்கங்கள் எழுப்பப்பட்டன. அப்போது நிர்வாகிகள் பேசுகையில், இந்திய மருத்துவத்தை தனியார்மயமாக்கும் போக்கின் ஒரு பகுதியாக நீட் தேர்வு உள்ளதால், ஜல்லிக்கட்டு போல மக்களை திரட்டி போராட்டம் நடத்துவோம் என்று எச்சரிக்கை விடுத்தனர்.

# வளைகுடா நாடுகளில் இருந்து தொடர்ந்து கிலோ கணக்கில் கடத்தி வரப்படும் தங்கம்

திருச்சி, ஆக. 29

தங்கக்கடத்தலில் ஈடுபடும் நபருக்கு கடத்தும் தங்கத்தின் அளவைப் பொறுத்து டிரிப் ஒன்றுக்கு குறைந்தபட்சம் பத்தாயிரம் முதல் ஒரு லட்சம் வரையில் கூலி கொடுப்பதாக சொல்கிறார்கள். விமான நிலையங்களில் பல கட்ட கண்காணிப்பு, சோதனைகள் இருந்த போதிலும் கடத்தல் தங்கம் தொடர்ச்சியாக பிடிபடுவது ஆச்சரியத்தையும் வியப்பையும் அளிக்கிறது.




திருச்சிசர்வதேசவிமான நிலையத்தில் பயணி மறைத்து கடத்தி வரப்பட்ட 1 கிலோ 300 கிராம் தங்கம் பிடிபட்டது. சென்னை விமான நிலையத்தில் ஸ்க்ரூ, கம்பி, பேட்டரியில் மறைத்து கடத்தி வரப்பட்ட சுமார் 1 கிலோ 200 கிராம் தங்கத்தை வான் நுண்ணறிவு பிரிவு அதிகாரிகள் கைப்பற்றினர். இது போன்ற செய்திகள் நாளும் பத்திரிகைகளில் தவறாமல் இடம்பெறுகிறது. கட்டிங் பிளேயர் கம்பிகளுக்குள் மறைத்து, தலைமுடிக்குள் மறைத்துவைத்து, பேஸ்ட் வடிவில், பேரிச்சம்பழக் கொட்டைகளை நீக்கிவிட்டு அதற்குப்பதில் தங்கத்தை வைத்து, ஊட்டச்சத்து பவுடருக்குள் தூளாக்கி, பிரவுன் டேப்புக்குள் பவுடர்களாக தூவி என நூதன முறையில் கடத்தல்காரர்கள் தங்கம் கடத்தி வருவது சுவாரசியம் தரக்கூடிய செய்தியாக மாறி உள்ளது. இவர்கள் "ரூம் போட்டு யோசிப்பாங்களோ?"னு வடிவேலு பாணியில்தான் கேட்கத் தோன்றுகிறது. திருச்சி சர்வதேச விமான நிலையத்தில் கடந்த ஜூலை மாதம் முதல் தற்போது வரை 5 ஆயிரத்து 264 கிராம் தங்கம் கைப்பற்றப்பட்டது. இதன் சந்தை மதிப்பு ரூ. 3 கோடியே 16 லட்சத்து 12 ஆயிரமாகும். கடந்த 2020 முதல் 2023 பிப்ரவரி வரையிலான மூன்றாண்டு காலத்தில் மட்டும் நாடு முழுவதும் தங்கம் கடத்தல் தொடர்பாக சுமார் 9,869 வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. இந்த வழக்குகளில் 8,956.49 கிலோ தங்கம் பறிமுதல் செய்யப்பட்டிருக்கிறது. இவ்வாறு விமான நிலையங்கள் வழியே தங்கம் கடத்தப்படுவதில் கேரளம் முதலிடத்திலும், தமிழகம் 2வது இடத்திலும் இருக்கிறது. 3வது இடத்தில் மகாராஷ்டிரா உள்ளது. இவை மாநிலங்களவையில் மத்திய நிதித்துறை இணை மந்திரி பங்கஜ் சௌத்ரி வழங்கிய அதிகாரப்பூர்வமான புள்ளிவிவரங்கள். நமது பாரத தேசத்தின் தங்க தேவை ஆண்டொன்றுக்கு 800 டன் என்கிறார்கள். இதில் மூன்றில் ஒரு பங்கு தங்கம் விமானம் வழியாக சட்ட விரோதமான முறையில் கடத்தப்பட்டு வருவதாக கவலையுடன் குறிப்பிடுகிறது உலகதங்க கவுன்சில். தங்கம் இறக்குமதி தொடர்பான அரசின் கட்டுப்பாடுகள், விதிக்கப்படும் அளவுக்கு அதிகமான வரிகள் முக்கிய காரணங்களாக இருக்கின்றன. தற்போது இறக்குமதி வரி, ஜி.எஸ்.டி. என 18.45 சதவீதம் வரை தங்கத்திற்கு வரி விதிக்கப்படுகிறது. கடந்த மூன்றாண்டுகளில் இல்லாத அளவிற்கு நடப்பு ஆண்டில் தங்க கடத்தலின் அளவு அதிகரித்திருப்பதையடுத்து, தங்கத்தின் மீதான இறக்குமதி வரியை 12.5% லிருந்து 7.5% ஆக குறைக்க மத்திய அரசு தற்போது பரிசீலித்து வருவதாக தகவல்கள் கூறுகின்றன. திருச்சி, சென்னை சர்வதேச விமான நிலையத்திலிருந்து சவுதி அரேபியா, குவைத் உள்ளிட்ட வளைகுடா நாடுகளுக்கு அதிகம் விமானங்கள் இயக்கப்படுகிறது. மேற்கண்ட நாடுகளில் தங்கத்தின் மச்சம் (தரம்) சரியாக இருக்கும் என்பதாலேயே அதிகளவில் தங்கம் வளைகுடா நாடுகளிலிருந்து கடத்தி வரப்படுகிறது. முழுக்க முழுக்க இத்தகைய தங்கக்கடத்தல் என்பது உள்ளூர் மார்க்கெட்டை சார்ந்து தான் நடைபெறுகிறது. இதற்கென்று பாரம்பரியமான வலை பின்னலை மிகக்கச்சிதமாக கட்டமைத்து வைத்திருக்கிறார்கள். ஒரு முறை தங்கக்கடத்தலுக்காக பயணிக்க குருவி (கடத்தல்காரர்) ஒருவருக்கு மிகக்குறைந்தபட்சம் 50 ஆயிரத்திலிருந்து 1 லட்சம் வரை செலவு செய்கிறார்கள். தங்கக்கடத்தலில் ஈடுபடும் நபருக்கு கடத்தும் தங்கத்தின் அளவைப் பொறுத்து டிரிப் ஒன்றுக்கு குறைந்தபட்சம் பத்தாயிரம் முதல் ஒரு லட்சம் வரையில் கூலி கொடுப்பதாக சொல்கிறார்கள். இதில் தினமும் சிக்குவது சிறிய வியாபாரிகள். பெரிய திமிங்கலங்கள் சத்தம் இல்லாமல் தப்பி சென்று விடுகிறார்கள் என்ற குற்றச்சாட்டும் பொதுவாக இருக்கிறது. கல்லூரி மாணவர்கள் தங்களின் ஆடம்பர செலவுகளுக்காக குருவிகளாக மாறி கடத்தலில் ஈடுபடுத்தப்படுகிறார்கள். இவ்வாறு கடத்தலில் ஈடுபடுபவர்கள் பிடிபட்டால் அதன் உரிமையாளர்கள் கடத்தல் தங்கத்திற்கான முழு வரியையும் செலுத்தி தங்கத்தையும் மாணவனையும் மீட்டு விடுகிறார்கள். இதனை சாதாரணமாக சில மாணவர்கள் பகுதி நேரவேலையாக தொடர்ச்சியாக பார்த்து வருகிறார்கள். விமான நிலையங்களில் பல கட்ட கண்காணிப்பு, சோதனைகள் இருந்த போதிலும் கடத்தல் தங்கம் தொடர்ச்சியாக பிடிபடுவது ஆச்சரியத்தையும் வியப்பையும் அளிக்கிறது. விமான நிலையங்களில் பிடிபடும் தங்கத்தை விட கடத்தப்படும் தங்கத்தின் அளவு பல மடங்கு அதிகம் எனசொல்கிறார்கள். இதன் மூலம் மத்திய அரசுக்கு கோடிக்கணக்கில் வரிஏய்ப்பு சப்தமில்லாமல் நடக்கிறது. அதிகாரிகள் நேர்மையாக இருந்து நாட்டை பாதுகாக்க வேண்டும் எனசமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# விவசாய பாசனத்துக்காக முசிறியில் இருந்து பெரம்பலூருக்கு காவிரி நீர் கொண்டு வரப்படுமா?

பெரம்பலூர், ஆக. 29

விவசாயத்தை முக்கிய தொழிலாக கொண்டு உள்ள பெரம்பலூர் மாவட்டத்தில் பெரும்பாலும் கிணற்று பாசனம் மூலம் விவசாயம் செய்யப்படுகிறது. போதியளவு ஆற்றுப்பாசனம் வசதி கிடையாது. மழைக்காலங்களில் தான் அந்த ஆற்றுப்பாசனமும் உள்ளது. பெரம்பலூர்மாவட்டத்தில்காவிரி ஆறும் கிடையாது. ஆனாலும் மாவட்டத்தில் சின்ன வெங்காயம், மக்காச்சோளம், பருத்தி, நெல், நிலக்கடலை, கரும்பு முதலியவை விளைவிக்கப்படும் முக்கியமான பயிர்கள் ஆகும். தமிழ்நாட்டில் சின்ன வெங்காய உற்பத்தியில் பெரம்பலூர் மாவட்டம் தொடர்ந்து முதலிடம் வகிக்கிறது. அதற்கு அடுத்தபடியாக மக்காச்சோளம், பருத்தி அதிகம் உற்பத்தி செய்யப்படுகிறது. பெரம்பலூர் மாவட்டத்தில் கடந்த ஆண்டு இறுதியில் போதியளவு மழை இல்லாததால் நிலத்தடி நீர்மட்டம் உயரவில்லை. மேலும் இந்த ஆண்டு தொடக்கத்திலும் போதியளவு மழை இல்லாததால் நிலத்தடி நீர்மட்டம் குறைந்து கொண்டே இருக்கிறது. கோடை காலத்தில் இருந்த வெயிலின் தாக்கத்தை விட தற்போது கடந்த சில நாட்களாகவே அதிகமாக காணப்பட்டு வருகிறது. இதனால் ஏற்கனவே வானம் பார்த்த பூமியான வறட்சி மாவட்டமான பெரம்பலூரில் பல்வேறு இடங்களில் நிலத்தடி நீர் அதாள பள்ளத்துக்கு சென்று விட்டன.

மேலும் மாவட்டத்தில் பெரும்பாலான விவசாய கிணறுகளில் தண்ணீர் அடியில் சென்று விட்டது. குறிப்பாக மலையடிவாரங்களில் உள்ள விவசாய கிணற்றுகளில் தண்ணீர் இல்லை என்றே கூறலாம். அந்த அளவுக்கு அங்கு தண்ணீர் பற்றாக்குறை நிலவுகிறது. இதனால் சில விவசாயிகள் சாகுபடி செய்யப்பட்ட பயிர்களுக்கு காசு கொடுத்து தண்ணீர் வாங்கி பாய்ச்சும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இப்படி சென்றால் விவசாயிகள்



விளை நிலங்கள் விலை நிலங்களாக மாற வாய்ப்புள்ளது. பெரம்பலூர் மாவட்டத்துக்கு காவிரி ஆற்றுப்பாசனம் கொண்டு வந்தால் விவசாயத்துக்கு தண்ணீர் பற்றாக்குறையும் இருக்காது. நிலத்தடி நீர்மட்டமும் உயரும். திருச்சி மாவட்டம், முசிறியில் இருந்து காவரி நீரை கால்வாய் மூலம் பெரம்பலூருக்கு கொண்டு வர வேண்டும் என்று விவசாயிகள் தெரிவித்துள்ளனர். இதுகுறித்து அவர்கள் கூறிய கருத்துகள் விவரம் வருமாறு:

இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு விவசாயிகள்சங்கத்தின்மாவட்ட செயலாளர் ஜெயராமன்: திருச்சி மாவட்டம் முசிறியில் இருந்து பெரம்பலூருக்கு கால்வாய் மூலம் காவிரி நீர் கொண்டு வரும் திட்டத்தை தமிழக அரசு கொண்டு வர மாவட்ட நிர்வாகம் வலியுறுத்த வேண்டும் என்று விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டு வருகிறது. கால்வாய் மூலம் பெரம்பலூருக்கு கொண்டு வரப்படும் காவிரி நீரை பொதுப்பணித்துறை, ஊரக வளர்ச்சித்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள ஏரிகளில் நிரப்பி ஏற்கனவே உள்ள பாசன வாய்க்கால்கள் மூலம் காவிரி நீரை விவசாயத்துக்கு பயன்படுத்தலாம். இந்த திட்டத்தை விரைந்து கொண்டு வர தமிழக அரசு நடவடிக்கை எடுக்க மாவட்ட நிர்வாகம் வலியுறுத்த வேண்டும்.

தமிழ்நாடு கிணற்று பாசன விவசாயிகள் சங்கத்தின் நிறுவனர் நாரயணசாமி: திருச்சி மாவட்டம் முசிறியில் இருந்து துறையூர் மார்க்கமாக கீராம்பூர் ஏரி அல்லது பெரம்பலூர் மாவட்டம், மங்கூன் வழியாக காவிரி நீரை கால்வாய் மூலம் களரம்பட்டி ஏரிக்கு கொண்டு வரப்பட்டால் லாடபுரம் 2 ஏரிகளும், அதனை தொடர்ந்து குரும்பலூர், செஞ்சேரி, அரணாரை, பெரம்பலூர் பெரிய ஏரி, வெள்ளந்தாங்கியம்மன் ஏரி, துறைமங்கலம் பெரிய ஏரி, சிறிய ஏரி வரை காவிரி நீரை கொண்டு செல்ல வாய்க்கால் வசதி இருக்கிறது. பின்னர் காவிரி நீர் மருதையாற்றில் கலந்து விடும். சாத்திய கூறுகள் இருந்தால் களரம்பட்டி ஏரிக்கு காவிரி நீரை கொண்டு வரலாம். அல்லது லாடபுரம் ஏரிக்கு காவிரி நீரை கொண்டு வரலாம். மாவட்டத்தின் பிற பகுதிகளுக்கும் காவிரி நீரை கொண்டு செல்லலாம். பெரம்பலூர் மாவட்டத்தில் தற்போது ஒரு தனியார் டயர் தொழிற்சாலை மட்டுமே உள்ளது. அதிலும் பெரும்பாலும் வடமாநில தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

மாவட்ட மக்களுக்கு எப்போதும் விவசாயம் தான் கைகொடுக்கும். பெரும்பாலும் கிணற்று பாசனம் உள்ள பெரம்பலூர் மாவட்டத்துக்கு காவிரி நீரை கொண்டு வந்தால் விவசாயம் இன்னும் வளர்ச்சி அடையும். வீணாக கடலுக்கு போகிற போது தான் காவிரி நீரை பெரம்பலூர் மாவட்டத்துக்கு திருப்பி விட வேண்டும் என்று ஒப்பந்தம் செய்யப்பட்டால் ஏற்கனவே காவிரி நீர் பாசனம் பெறும் விவசாயிகள் பாதிக்கப்பட மாட்டார்கள்.

ஆலத்தூர் தாலுகா, நாட்டாமங்கலத்தை சேர்ந்த விவசாயிபாபநாசன்: காவிரி ஆற்றின் நீரை கால்வாய் மூலமாக பெரம்பலூர் மாவட்டத்திற்கு கொண்டு வந்தால் விவசாயிகள் பயன் பெறுவார்கள். நிலத்தடி நீர் மட்டமும் உயரும், குடிநீர் பிரச்சினையும் ஏற்படாது. இந்த திட்டங்களை செயல்படுத்துவதற்கு ரூ.200 முதல் ரூ.300 கோடி வரை செலவாகலாம். இதை மாநில அரசு அல்லது மத்திய அரசு செயல்படுத்தினால் மக்களுக்கு பயனுள்ளதாக இருக்கும். ஏற்கனவே மேட்டூர் அணையின் உபரி நீரான காவிரி நீரை இணைப்பு கால்வாய் துறையூர், தா.பேட்டை வரை உள்ள ஏரிகளில் தேக்கி விவசாய பாசனத்திற்கு பயன்படுத்தும் விதமாக சரபங்கா நதி, திருமணிமுத்தாறு மற்றும் அய்யாறு ஆறுகளை இணைத்து கீராம்பூர் ஏரி வரை நீர் வழங்கும் திட்டம் தமிழக அரசின் பரிசீலனையில் உள்ளதாக கூறப்படுகிறது. இந்த திட்டத்தில் பெரம்பலூர் மாவட்டத்தையும் இணைத்தால் எளிதாக காவிரி நீரை கொண்டு வந்து விடலாம். இவ்வாறு அவர்கள் கூறினர். ஏற்கனவே பெரம்பலூர் மாவட்டத்தில் நீர் நிலைகளை பராமரிக்க போதிய நிதி இல்லை என்று கூறி, சில நீர் நிலைகளில் தான் மராமத்து பணிகள் நடைபெற்று வருகிறது. இந்த நிலையில் திருச்சி மாவட்டம் முசிறியில் இருந்து பெரம்பலூர் மாவட்டத்துக்கு கால்வாய் மூலம் காவிரி நீர் கொண்டு வரும் திட்டத்தை செயல்படுத்த அரசுக்கு பெரிய நிதி தேவைப்படும். இந்த திட்டம் கொண்டு வர சாத்திய கூறுகள் இருக்கிறதா? என்று முதலில் தமிழக அரசு சம்பந்தப்பட்ட துறை வல்லுனர்களை கொண்டு குழு அமைத்து முறையாக ஆய்வு செய்ய வேண்டும். சாத்திய கூறுகள் இருந்தால் நிதி ஒதுக்கி விரைந்து திட்டத்தை செயல்படுத்த தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே பெரம்பலூர் மாவட்ட விவசாயிகளின் கோரிக்கையாக உள்ளது.

# ஒட்டப்பட்டியில் பாட்டாளி இளைஞர் சங்க பொதுக்குழு கூட்டம்

தருமபுரி, ஆக. 29

தருமபுரி மாவட்டத்தில் சிப்காட் விரைந்து செயல்படுத்த தேவையான நிதியை தமிழக அரசு ஒதுக்கி விரைந்து தொழிற்சாலைகள் அமைத்து இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு உருவாக்க வேண்டும். தருமபுரி மாவட்டத்தில் பள்ளி, கல்லூரி செயல்படும் பகுதிகளில் போதை பொருட்கள் நடமாட்டம் அதிக அளவில் உள்ளன.

தருமபுரி மேற்கு மாவட்ட பாட்டாளி இளைஞர் சங்க பொதுக்குழு கூட்டம் ஒட்டப்பட்டியில் நடைபெற்றது. இந்த கூட்டத்திற்கு தருமபுரி சட்டமன்ற உறுப்பினரும், பாட்டாளி மக்கள் கட்சியின் தருமபுரி மேற்கு மாவட்ட செயலாளருமான எஸ்.பி. வெங்கடேஷ்வரன் கலந்து கொண்டு கூட்டத்தின்



நோக்கம் குறித்து சிறப்புரையாற்றினார். இந்த கூட்டத்தில் இளைஞர் சங்க ஒன்றிய தலைவர்கள், செயலாளர்கள், பாட்டாளி மக்கள் கட்சியின் ஒன்றிய தலைவர்கள், செயலாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். தருமபுரி மாவட்டத்தில் சிப்காட் விரைந்து செயல்படுத்த தேவையான நிதியை தமிழக அரசு ஒதுக்கி விரைந்து தொழிற்சாலைகள் அமைத்து இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு உருவாக்க வேண்டும். தருமபுரி மாவட்டத்தில் பள்ளி, கல்லூரி செயல்படும் பகுதிகளில் போதை பொருட்கள் நடமாட்டம் அதிக அளவில் உள்ளன. மாணவர்கள், இளைஞர்கள் போதை பழக்கத்திற்கு அடிமையாகும் சூழ்நிலை உள்ளதால் போதை பொருட்களை தடுக்கின்ற வகையில் உடனடியாக மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். காவிரி ஆறு தருமபுரி மாவட்டத்தின் வழியாக தான் முதலில் நுழைகிறது. காவிரி உபரி நீரை தருமபுரி மாவட்டத்திலுள்ள அனைத்து ஏரி, குளங்களும் நிரப்புகின்ற வகையில் காவிரி உபரி நீர் திட்டத்தை செயல்படுத்தி வேலைத்தேடி வெளி மாவட்டங்கள், வெளி மாநிலங்களில் சென்று பல லட்சம் இளைஞர்கள் கூலித் தொழில் செய்வதை தடுக்கின்ற வகையிலும், தருமபுரி மாவட்ட விவசாய பெருமக்கள் விவசாய தொழிலை மேம் படுத்துக்கின்ற வகையிலும் இத்திட்டத்தை உடனடியாக செயல் படுத்த வேண்டும். தருமபுரி மாவட்டத்திலுள்ள அனைத்து கிராமங்களிலும் பாட்டாளி இளைஞர்சங்கத்தைமேம்படுத்துகின்ற வகையில், இளைஞர்களை ஒருங்கிணைத்து கிராம கூட்டங்கள் நடத்த வேண்டும் என தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன.

# கும்பகோணம் படித்துறையில் காவிரி பொங்கல் விழா

சுவாமிமலை, ஆக. 29

கும்பகோணம் காவிரிக் கரை செட்டிப்ப டித்துறை விஸ்வநாதர் கோவில் நிர்வாகக்குழு சார்பில் காவிரிக்கு நன்றி தெரிவித்து வழிபடும் 75ம் ஆண்டு காவிரி பொங்கல் விழா கும்பகோணம் ராசராசேந்திரன் பேட்டை காவிரி படித்துறையில் நேற்று மாலை நடைபெற்றது. விழாவில் விருத்தாம்பாள் சந்திரமோகன் அனைவரையும் வரவேற்றார். ஆனந்தி தமிழழகன், கஸ்தூரி முருகன், உமாமகேஸ்வரி பாலசுப்பிரமணியன், லதா முருகன் மற்றும் ராஜகுமாரி சுந்தரமூர்த்தி ஆகியோர் குத்துவிளக்கேற்றினர். சிறப்பு விருந்தினராக கும்பகோணம் மாநகராட்சி துணை மேயர் சு.ப.தமிழழகன் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்.

பார்த்தசாரதி, வந்தனா சிதம்பரநாதன் மற்றும் கும்பகோணம் மாநகர் நல அலுவலர் பிரேமா சதீஷ்குமார் ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினர்.

முடிவில் சாவித்திரி செல்வ கணபதி நன்றி கூறினார். தொடர்ந்து, கடஸ்தாபனம், சிறப்பு ஹோமம் நடைபெற்று, மகா தீபாராதனை காண்பிக்கப்பட்டது. பின்னர், கடம் புறப்பட்டு காவிரி நதிக்கு பால், சந்தனம், மஞ்சள் உள்ளிட்டவைகளால் அபிஷேகம் நடைபெற்றது. பின், காவிரி அன்னைக்கு தீபாராதனை காண்பிக்கப்பட்டது. பின்னர், காவிரியில் துணை மேயர் தமிழழகன் மற்றும் ஆனந்தி தமிழழகன் ஆகியோர் தீபத்தை மிதக்க விட்டனர். விழாவில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு காவிரி அன்னையை வணங்கி வழிபட்டனர். முன்னதாக விளக்கு பூஜை நடந்தது. இதில் ஏராளமான பெண்கள் கலந்து கொண்டு குடும்ப மேன்மைக்காக விளக்கேற்றி மங்கள பொருட்கள் மற்றும் சர்க்கரை பொங்கல் நெய்வேத்தியம் கொண்டு மேளதாளம் முழங்க அர்ச்சனை செய்து வழிபட்டனர்.

முடிவில் விளக்கிற்கு மங்கள ஆர்த்தி செய்தனர்.

நமது தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

# கல் உடைக்கும் குத்தகை உரிமம் பெற விண்ணப்பிக்கலாம்

பெரம்பலூர், ஆக. 29

பெரம்பலூர் மாவட்டத்தில் அரசு புறம்போக்கு நிலங்களில் அமைந்துள்ள 31 சாதாரண கல்குவாரிகளில் இருந்து சாதாரண கல் உடைக்க குத்தகை உரிமம் பெற முன்னுரிமை அடிப்படையில் பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட சுய உதவி குழுக்கள் மற்றும் விடுவிக்கப்பட்ட கொத்தடிமை தொழிலாளர் சங்கங்களிடமிருந்து நேரடியாக விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. 1959ம் ஆண்டு தமிழ்நாடு சிறுகனிம சலுகை விதிகளின் விதி 8ன்படி பெரம்பலூர் மாவட்டத்தில் மேற்கண்ட கல் குவாரிகளிலிருந்து கட்டுமானப் பணிகளுக்கு உபயோகப்படுத்தப்படும் சாதாரண கட்டுக்கல், சக்கை கல், வேலிகல், ஜல்லி ஆகியவற்றை குவாரி செய்வதற்காக குத்தகை உரிமம் பெற விருப்பம் உள்ள உரிய அங்கீகாரம் பெற்ற பொன்விழா கிராம சுய வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட சுய உதவி குழுக்கள் மற்றும் விடுவிக்கப்பட்ட கொத்தடிமை தொழிலாளர் சங்கங்கள் ஆகியவற்றுக்கு குத்தகை உரிமம் வழங்கப்படவுள்ளது.



இதற்கான விண்ணப்பங்கள் தமிழ்நாடு சிறுகனிம சலுகை விதிகள் இணைப்பு 6பியில் கண்டுள்ளவாறு பெரம்பலூர் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் அறை எண்.21ல் உள்ள மாவட்ட புவியியல் மற்றும் சுரங்கத்துறை உதவி இயக்குனர் அலுவலகத்துக்கு நேரிலோ அல்லது தபாலிலோ நாளை மறுநாள் (புதன்கிழமை) மாலை 5 மணி வரை வரவேற்கப்படுகிறது. மேலும் விவரங்களுக்கு சம்பந்தப்பட்ட தாசில்தார்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், பெரம்பலூர் ஆர்.டி.ஓ. மற்றும் பெரம்பலூர் மாவட்ட புவியியல் மற்றும் சுரங்கத்துறை அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம், என்று மாவட்ட நிர்வாகம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# பிரசாந்த் பட டைட்டிலை கைப்பற்றிய கவின்

தமிழ் சினிமாவில் முன்னணி இசையமைப்பாளர்களில் யுவன் சங்கர் ராஜாவுக்கு எப்போதும் தனி இடம் உண்டு. பி.ஜி.எம். கிங் என்று ரசிகர்களால் போற்றப்படும் யுவன் சங்கர் ராஜா இசையை கடந்து திரையுலகில் பல்வேறு பணிகளில் மும்முரம் காட்டி வருகிறார். அந்த வகையில், யுவன் சங்கர் ராஜா ஒய்.எஸ்.ஆர். ஃபிலிம்ஸ் என்ற பெயரில் படத்தயாரிப்பு நிறுவனத்தை தொடங்கி படத்தயாரிப்பு பணிகளிலும் ஈடுபட்டு வருகிறார். இவர் தயாரித்து வெளியான முதல் படம் பியார் பிரேமா காதல், ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றது. இந்த படத்தை இயக்குனர் எலன் இயக்கி இருந்தார். இந்த நிலையில்,

பியார் பிரேமா காதல்' படத்திற்கு பிறகு மீண்டும் இயக்குனர் எலன் உடன் இணைகிறார் இசையமைப்பாளர் யுவன் சங்கர் ராஜா. கவின் கதாநாயகனாக நடிக்கும் இந்த படத்தின் டைட்டில் மற்றும் போஸ்டர் இன்று மாலை 6 மணிக்கு வெளியாகும் என படக்குழு அறிவித்திருந்தது. ஸ்டார் போஸ்டர் அதன்படி, இப்படத்திற்கு 'ஸ்டார்' என படக்குழு தலைப்பு வைத்துள்ளது. மேலும் இது தொடர்பான போஸ்டரையும் பகிர்ந்துள்ளனர். 'ஸ்டார்' படத்தின் புரோமோ ஆகஸ்ட் 31 ஆம் தேதி வெளியாகவுள்ளது. 2001 ஆம் ஆண்டில் பிரசாந்த் மற்றும் ஜோதிகா நடிப்பில் 'ஸ்டார்' படம் வெளியானது குறிப்பிடத்தக்கது.

# 2வது பட தயாரிப்பிற்கு ரெடியான சாக்ஷி டோனி



டோனியும், அவரது மனைவி சாக்ஷி சிங் டோனியும் இணைந்து 'தோனி எண்டர்டெயின்மெண்ட்' என்ற திரைப்படதயாரிப்புநிறுவனத்தைநடத்திவருகின்றனர். இவர்கள் தயாரிப்பில் சமீபத்தில் தமிழில் லெட்ஸ் கெட் மேரிட் (Lets Get MarriedLGM) என்ற திரைப்படம் வெளியானது.

இந்திய நட்சத்திர கிரிக்கெட் வீரரான மகேந்திரா சிங் டோனியும், அவரது மனைவி சாக்ஷி சிங் டோனியும் இணைந்து 'தோனி எண்டர்டெயின்மெண்ட்' என்ற திரைப்பட தயாரிப்பு நிறுவனத்தின் மூலம் தமிழில் லெட்ஸ் கெட் மேரிட் (Lets Get MarriedLGM) என்ற திரைப்படத்தை தயாரித்திருந்தனர். காதல் கதையம்சம் கொண்ட படமாக உருவாகியுள்ள இப்படத்தை ரமேஷ் தமிழ்மணி இயக்கியிருந்தார். இதில் ஹரிஷ் கல்யாண், லவ் டுடே படத்தின் மூலம் மிகவும் பிரபலமடைந்த இவானா, நதியா மற்றும் நகைச்சுவை நடிகர் யோகி பாபு உள்ளிட்ட பலர் நடித்திருந்தனர்.

பெரும் எதிர்பார்ப்பில் உருவாகியிருந்த இப்படம் ஜூன் 28ம் தேதி திரையரங்குகளில் வெளியாகி கலவையான விமர்சனங்களை பெற்றது. இந்நிலையில், தயாரிப்பாளர் சாக்ஷி டோனி தன் அடுத்த படத்திற்கான கதை கேட்கும் பணியில் தீவிரம் காட்டி வருவதாகவும் தனது இரண்டாவது படைப்பை தரமானதாக உருவாக்கும் ஆர்வத்தில் உள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

# வீடியோ வெளியிட்டு தனி ஒருவன் 2 அப்டேட் கொடுத்த மோகன் ராஜா



தனி ஒருவன் 2 படத்தின் படப்பிடிப்பு அடுத்த ஆண்டு துவங்குகிறது. தனி ஒருவன்2 ப்ரோமோ வீடியோவிற்கு சாம் சி.எஸ். இசையமைத்து இருக்கிறார்.

ஜெயம் ரவி, அரவிந்த் சாமி, நயன்தாரா மற்றும் பலர் நடிப்பில் வெளியாகி மாபெரும் வெற்றி பெற்ற படம் தனி ஒருவன். ஏ.ஜி.எஸ். என்டர்டெயின்மென்ட் சார்பில் கல்பாத்தி எஸ் அகோரம் தயாரிப்பில் 2015ம் ஆண்டு வெளியான இந்த படத்தை மோகன் ராஜா இயக்கி இருந்தார். ஹிப் ஹாப் தமிழா இந்த படத்துக்கு இசையமைத்து இருந்தார். இன்றோடு இந்த படம் வெளியாகி எட்டு ஆண்டுகள் நிறைவடைந்தது. இதனை கொண்டாடும் வகையிலும், ரசிகர்களின் நீண்ட கால கேள்விக்கு பதில் அளிக்கும் வகையில், தனி ஒருவன் 2 படம் பற்றிய அறிவிப்பு வெளியாகி உள்ளது. ஜெயம் ரவி மற்றும் நயன்தாரா நடிப்பில் உருவாகும் தனி ஒருவன் 2 படத்தின் படப்பிடிப்பு அடுத்த ஆண்டு துவங்கும் என்று தயாரிப்பு நிறுவனம் வீடியோ வெளியிட்டு தெரிவித்து இருக்கிறது.

# லைகா தயாரிக்கும் அடுத்த படம் இயக்குனராகிறார் விஜயின் மகன் சஞ்சய்

நடிகர் விஜய்க்கு ஜேசன் சஞ்சய் என்ற மகனும் திவ்யா சாஷா என்ற மகளும் இருக்கிறார்கள். சஞ்சய்க்கு சினிமாவில் ஆர்வம் இருப்பதை அறிந்த விஜய், அது தொடர்பாக படிப்பதற்காக அமெரிக்கா அனுப்பி வைத்தார். இதையடுத்து ஜேசன் சஞ்சய் விரைவில் படம் இயக்கவுள்ளதாக தகவல் பரவி வந்தது. இந்நிலையில், விஜய்யின் மகன் சஞ்சய் இயக்குனராக அறிமுகமாகவுள்ளார். அதாவது, சஞ்சய் புதிய படம் ஒன்றை இயக்கவுள்ளார். இந்த படத்தை லைகா நிறுவனம் தயாரிக்கவுள்ளது. இது குறித்த அதிகாரப்பூர்வ அறிவிப்பை படக்குழு வெளியிட்டுள்ளது. இது தொடர்பான புகைப்படத்தை விஜய் ரசிகர்கள் சமூக வலைதளத்தில் அதிகம் பகிர்ந்து வருகின்றனர்.



# தேவி ஸ்ரீ பிரசாத்தைத் தொடர்ந்து இளையராஜாவை சந்தித்த ஸ்ரீகாந்த் தேவா



'கருவறை' ஆவணப்படத்திற்காக இசையமைப்பாளர் ஸ்ரீகாந்த் தேவாவிற்கு தேசிய விருது அறிவிக்கப்பட்டது. இவருக்கு திரைப்பிரபலங்கள், ரசிகர்கள் என பலரும் தங்களது வாழ்த்துகளை தெரிவித்தனர்.

69வது தேசிய திரைப்பட விருதுகள் வழங்கும் விழா டெல்லியில் நடைபெறவுள்ளது. இந்த விழாவில் 2021ஆம் ஆண்டிற்கான விருதுகள் வழங்கப்படவுள்ளன. இதையடுத்து தேசிய விருது பெறும் படங்களின் பட்டியல் சமீபத்தில் வெளியானது. இதில் இ.வி.கணேஷன்பாபு கதை, திரைக்கதை எழுதி இயக்கி தயாரித்திருந்த 'கருவறை' ஆவணப்படத்திற்காக இசையமைப்பாளர் ஸ்ரீகாந்த் தேவாவிற்கு தேசிய விருது அறிவிக்கப்பட்டது. இவருக்கு திரைப்பிரபலங்கள், ரசிகர்கள் என பலரும் தங்களது வாழ்த்துகளை தெரிவித்தனர். இந்நிலையில், ஸ்ரீகாந்த் தேவா, இசையமைப்பாளர் இளையராஜாவை நேரில் சந்தித்து ஆசிபெற்றுள்ளார். இது தொடர்பான புகைப்படம் சமூக வலைதளத்தில் வைரலாகி வருகிறது. இதற்கு முன்பு தேவி ஸ்ரீ பிரசாத், இளையராஜாவை நேரில் சந்தித்து ஆசிபெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

# தென் ஆப்பிரிக்காவுக்கு எதிரான தொடர் மேக்ஸ்வெல் விலகல்



மேக்ஸ்வெல்லுக்கு பயிற்சியின் போது காயம் ஏற்பட்டுள்ளது. அவருக்கு பதிலாக அணியில் விக்கெட் கீப்பர் பேட்ஸ்மேன் மேத்யூ வேட் சேர்க்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

மெல்போர்ன்: ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணி தென் ஆப்பிரிக்காவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 டி20 மற்றும் 5 ஒருநாள் போட்டிகள்கொண்டதொடரில் பங்கேற்று ஆட உள்ளது. இந்த தொடரில் முதலில் டி20 போட்டிகள் நடைபெற உள்ளன. இரு அணிகளுக்கு இடையிலான முதலாவது டி20 போட்டி வரும் 30ம் தேதி நடைபெற உள்ளது.

இந்நிலையில் தென் ஆப்பிரிக்காவுக்கு எதிரான தொடரில் ஆஸ்திரேலிய அணியில் டி 20 மற்றும் ஒருநாள் அணிகளில் இடம் பெற்றிருந்த அதிரடி ஆட்டக்காரர் க்ளென் மேக்ஸ்வெல் கணுக்காலில் ஏற்பட்ட காயம் காரணமாக விலகி உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. டி20 தொடர் நிறைவடைந்த பின்னர் அவருக்கு குழந்தை பிறக்க இருப்பதை முன்னிட்டு மேக்ஸ்வெல் ஏற்கனவே ஆஸ்திரேலியா செல்ல திட்டமிட்டிருந்தார். இந்நிலையில் அவருக்கு பயிற்சியின் போதுகாயம்ஏற்பட்டுள்ளது. வரும்அக்டோபர், நவம்பர்மாதங்களில்இந்தியாவில் 50 ஓவர் உலகக்கோப்பை தொடர் நடைபெற இருப்பதால் அதற்கு அவர் முழு உடற்தகுதியுடன் இருக்க வேண்டும் என்பதால் அவர் டி20 தொடருக்கான அணியிலிருந்தும் விலகி உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. மேலும், அவருக்கு பதிலாக அணியில் விக்கெட் கீப்பர் பேட்ஸ்மேன் மேத்யூ வேட் சேர்க்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

# எல்லாமே இனிமே நல்லாத்தான் நடக்கும் வீடியோ மூலம் வெறி ஏற்றும் ரிஷப் பந்த்

ரிஷப் பண்ட் ஐபிஎல் தொடரில் விளையாடவில்லை. ஆசிய கோப்பை மற்றும் உலகக்கோப்பைகிரிக்கெட் தொடரில்விளையாடமுடியாதநிலையில்இருக்கிறார்.

இந்திய கிரிக்கெட் அணியின் நட்சத்திர வீரர் ரிஷப் பண்ட் கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் டெல்லி டேராடூன் நெடுஞ்சாலையில் நடந்த கார் விபத்தில் படுகாயமடைந்தார்.

இதனால், ரிஷப் பண்ட் ஐபிஎல் தொடரில் விளையாடவில்லை. மேலும் வருகிற ஆசிய கோப்பை மற்றும் உலகக் கோப்பை கிரிக்கெட் தொடரில் விளையாட முடியாத நிலையில் இருக்கிறார்.

ரிஷப் பண்ட் அவரது உடல் நலம் குறித்து தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் அவ்வபோது புகைப்படம் மற்றும் வீடியோவை பதிவிட்டு வருவார். இந்நிலையில் தற்போது அவர் எக்சர் சைக்கிளில் உடற்பயிற்சி செய்யும் வீடியோவை சமூக வலைதள பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

அதில் இனி நல்லதே நடக்கும் என தலைப்பிட்டிருந்தார். மிஸ் யூ ரிஷப் என பலரும் தங்களது கருத்துக்களை பதிவிட்டு வருகின்றனர்.



# பாக். வீரரை இந்திய தேசிய கொடி அருகில் நிற்க வைத்த நீரஜ் சோப்ரா இதயங்களை வென்ற நெகிழ்ச்சி வீடியோ

19வது உலக தடகள சாம்பியன்ஷிப் போட்டி ஹங்கேரி தலைநகர் புடாபெஸ்டில் கடந்த 9 நாட்களாக நடந்து வந்தது. கடைசி நாளான நேற்று, இரவு ஆண்களுக்கான ஈட்டி எறிதலின் இறுதிசுற்று நடந்தது. எதிர்பார்த்தபடியே ஒலிம்பிக் சாம்பியனான இந்தியாவின் நீரஜ் சோப்ரா அதிகபட்சமாக 88.17 மீட்டர் தூரம் ஈட்டி எறிந்து தங்கப்பதக்கத்தை கைப்பற்றினார். அவருக்கு சவாலாக இருந்த பாகிஸ்தானின் அர்ஷத் நதீம் (87.82 மீட்டர்) வெள்ளிப்பதக்கம் பெற்றார். இறுதிப் போட்டிக்குப் பிறகு, நீரஜ் சோப்ரா மற்றும் அர்ஷத் நதீம் இருவரும் களத்தில் தங்களது தருணத்தைப் பகிர்ந்து கொண்டனர். தற்போது எங்கள் இரு நாடுகளும் எப்படி வளர்ந்து வருகின்றன என்பதை நாங்கள் விவாதித்தோம். பாகிஸ்தான் வீரர் அர்ஷாத் 2வது இடத்தை பிடித்து வெள்ளிப்பதக்கம் வென்றது மகிழ்ச்சி அளிக்கிறது என நிரஜ் சோப்ரா தெரிவித்திருந்தார். அது சமூக ஊடகங்கள் முழுவதும் ரசிகர்களின் இதயங்களை வென்றது. நீரஜ் மற்றும் நதீம் களத்தில் ஒருவரை ஒருவர் கட்டி தழுவினர். அவர்களின் பிணைப்பு இந்தியா பாகிஸ்தான் வேற்றுமைக்கு அப்பால் செல்கிறது. இறுதிப் போட்டியின் முடிவில், நீரஜ் மைதானத்தில் புகைப்படம் எடுக்க நதீமை அழைத்தார். நதீம் உடனடியாக மூவர்ண கொடியை ஏந்திய நீரஜ் சோப்ராவுடன் நின்று புகைப்படம் எடுத்தார். அவர்களுடன் வெண்கலப் பதக்கம் வென்ற செக் குடியரசின் ஜக்குப் வாட்லெஜும் நின்றார். நீரஜ் மற்றும் நதீம் இருவரும் ஒருவருக்கொருவர் வாழ்த்துக்களைத் தெரிவித்த தருணம் சமூக வலைதளங்களில் அதிகமாக பகிரப்பட்டது. மூவர்ண கொடியுடன் புகைப்படம் எடுத்த பாகிஸ்தான் வீரரின் செயலுக்கு பாராட்டுக்கள் குவிந்த வண்ணம் உள்ளன. இது தொடர்பான வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.



# ஆசிய பெண்கள் 5 பேர் ஹாக்கி மலேசியாவை வீழ்த்தி உலகக் கோப்பைக்கு தகுதிப் பெற்றது இந்தியா



இந்திய கேப்டன் நவ்ஜோத் கவுர் ஹாட்ரிக் கோல் அடித்து சாதனை படைத்தார். அடுத்த ஆண்டு உலகக் கோப்பைக்கு இந்திய பெண்கள் அணி தகுதி பெற்றது.

ஒரு அணியில் 5 பேர் களம் காணும் முதலாவது உலகக்கோப்பை ஹாக்கி போட்டி ஓமன் தலை நகர் மஸ்கட்டில் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் நடக்கிறது.

இந்த தொடருக்கு போட்டியை நடத்தும் ஓமன் நேரடியாக தகுதி பெறும். மற்ற 5 மண்டலங்களில் நடைபெறும் தகுதி சுற்று போட்டிகளில் முதல் 3 இடங்களை பிடிக்கும் அணிகள் தகுதி அடையும். உலகக்கோப்பை போட்டிக்கான ஆசிய மண்டல பெண்கள் 5 பேர் ஹாக்கி தகுதி சுற்று போட்டி ஓமன் நாட்டின் சலாலா நகரில் தொடங்கியது.

இந்நிலையில் இன்று நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் இந்திய அணி மலேசிய அணியை எதிர் கொண்டது. லீக் சுற்றை போலவே இதிலும் ஆதிக்கம் செலுத்திய இந்திய அணி 95 என்ற கோல் கணக்கில் மலேசிய அணியை வீழ்த்தி இறுதி போட்டிக்கு முன்னேறி உள்ளது.

இந்திய அணி தரப்பில் நவ்ஜோத் கவுர் ஹாட்ரிக் கோல் அடித்து அசத்தினார். அவரே இந்த ஆட்டத்தின் ஆட்டநாயகியாகவும் தேர்வு செய்யப்பட்டார். இந்த தொடரில் இந்திய அணி தோல்வியே சந்திக்காமல் வீருநடை போடுகிறது. இந்த வெற்றியின் மூலம் இந்திய அணி ஓமன் நாட்டில் நடைபெற உள்ள உலகக்கோப்பை தொடருக்கு தகுதி பெற்றுள்ளது. இந்திய அணி இறுதி போட்டியில் தாய்லாந்து அணியுடன் இன்று இரவு பலபரீட்சை நடத்த உள்ளது. முன்னதாக இவ்விரு அணிகள் மோதிய லீக் சுற்றில் இந்திய அணி தாய்லாந்து அணியை வீழ்த்தி வெற்றி பெற்று இருந்தது குறிப்பிடத்தக்கது.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.